# நேர்மையற்ற தீர்ப்பு நெருப்புக்குத் தீனி

(தமிழ் வழிக் கல்விக்கெதிரான உயர்நீதி மன்றத் தீர்ப்பு குறித்த விரிவான திறனாய்வு)



பெ. மணியரசன்

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி வெளியீடு

**நேர்மையற்ற தீர்ப்பு**
**நெருப்புக்குத் தீனி**

முதல் பதிப்பு: **2000** மே 7

**கிடைக்குமிடம்**

தமிழர் கண்ணோட்டம்
53(அ) சமீன்தார் குடியிருப்பு
புது ஆற்றுச் சாலை
தஞ்சாவூர் - 613 001.

அட்டைப்படம்: *சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பை எரிக்கும் போராட்டம். 29.04.2000 அன்று தஞ்சையில் நடந்தபோது எடுத்தபடம்.*

நன்கொடை ரூ.**5.00**

# நேர்மையற்ற தீர்ப்பு நெருப்புக்குத் தீனி

நீதி வழங்கினால் மட்டும் போதாது, நீதி வழங்கிய தோற்றம் முக்கியம் என்பார்கள். தமிழ் வழிக் கல்விக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் நீதியும் இல்லை, நீதி வழங்கியதற்கான தோற்றமும் இல்லை.

சிறந்த நீதிபதிகள் எழுதும் தீர்ப்புகள் ஆய்வுக்கட்டுரை போல் இருக்கும். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஏ.எஸ். வெங்கடாசல மூர்த்தி, எஸ். ஜெகதீசன், என். தினகர் ஆகிய மூவரும் 20.4.2000 அன்று வழங்கிய தீர்ப்புரை வழக்குரைஞர் ஒருவரின் வறட்டுத்தனமான வாதுரைபோல் உள்ளது.

தமிழ்ச்சான்றோர் பேரவையும் அதனோடு சேர்ந்து போராடிய தமிழ் அமைப்புகளும் மற்றும் தனி அன்பர்களும், அறிஞர்களும் தமிழ் வழிக் கல்வி கோரி தொடங்கிய போராட்டம், அதன் சிகரமாக 25.4.1999 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தின் முன் முனைவர் தமிழண்ணல் தலைமையில் 102 தமிழ் அறிஞர்களும் உணர்வாளர்களும் தொடங்கிய சாகும்வரையிலான பட்டினிப்போர், அதையொட்டி 26.4.99 அன்று தமிழ்த்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் தமிழக அரசு சார்பில் தமிழ் வழிக்கல்வியை நிறைவேற்ற எழுதிக் கொடுத்த உறுதி மொழிச் சீட்டு அதனடிப்படையில் அமைக்கப்பட்ட நீதிபதி மோகன் குழு முதலிய சங்கிலித் தொடர் நிகழ்வுகளின் விளைவாக தமிழக அரசு 19.11.1999 அன்று ஓர் அரசாணை வெளியிட்டது. **(G.O Ms No. 324 DT: 19.11.99)**

இதன்படி முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழி கட்டாய மொழிப்பாடமாகவும் பயிற்று மொழியாகவும் இருக்கும். 2000 -01 ஆம் கல்வியாண்டிலிருந்து இந்த ஆணை செயலுக்கு வரும். இதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் ஐந்து வகுப்புகளும் மேற்கண்டவாறு தமிழ் வழிக் கல்விக்கு மாற்றப்படும்.

இந்த அரசு ஆணை மாணவர்களின், பெற்றோர்களின் உரிமையை பாதிப்பதாகவும், தங்கள் உரிமையை பாதிப்பதாகவும் கூறிக்கொண்டு மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் பலர் இந்த ஆணையை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் வழக்கு தொடுத்தனர். தமிழ்நாடு தமிழ் மற்றும் ஆங்கிலப்பள்ளிகளின் சங்கம் (பதிவெண் 17/94) என்ற அமைப்பின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் **B.T.** குமார் இந்த வழக்கில் முதல் வாதி ஆவார். இவரன்னியில் மேலும் 31 பேர் பல்வேறு மெட்ரிகுலேசன் பள்ளிகளின் சார்பில் இந்த வழக்கில் வாதிகளாக சேர்ந்து கொண்டனர்.

பிரதிவாதியாக தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை செயலாளர், பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோர் சேர்க்கப்பட்டனர். இப்பிரதிவாதிகளுள் ஒருவராகத் தமிழ்ச்சான்றோர் பேரவை நிறுவனர் நா. அருணாசலம் சேர்ந்து கொண்டார். இவருக்காக மூத்த வழக்குரைஞர் கே. சந்துரு ஆஜரானார். மேலும் வலம்புரி ஜான், மூத்த வழக்குரைஞர் காந்தி, உயர்நீதி மன்ற வழக்குரைஞர் அரி பரந்தாமன் போன்றவர்கள் பல்வேறு அமைப்புகள் சார்பாக தங்களைப் பிரதிவாதிகளாக சேர்த்துக் கொள்ளக் கோரி மனுச் செய்தனர்.

## *உயர்நீதிமன்றத்தின் பக்கச் சாய்வு*

மெட்ரிகுலேசன் தரப்பில் வந்தவரையெல்லாம் வாதியாக ஏற்றுக் கொண்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய முழு அமர்வு மன்றம் தமிழ் வழிக் கல்விக்கு ஆதரவாக பிரதிவாதிகளாகச் சேர மனுச் செய்த தமிழக அரசு அல்லாத அனைவரையும் பிரதிவாதிகளாக அனுமதிக்க மறுத்து விட்டது. பிரதிவாதியாக முதலில் ஏற்கப்பட்ட தமிழ்ச்சான்றோர் பேரவையும் பின்னர் நீக்கப்பட்டது.

இந் நடவடிக்கைகளின் மூலம் முழு அமர்வு மன்றம் ஒருதலைபட்சமாக இருக்கிறது என்ற தனது அடையாளத்தை எடுத்த எடுப்பிலேயே வெளிப்படுத்திக் கொண்டது. இவ்வாறாக அது தமிழ் வழிக் கல்விக்கு எதிராக மெட்ரிக்குலேசன் பள்ளி முதலாளிகளுக்கு ஆதரவாக செயல்படத் தொடங்கியது.

தமிழ்ச்சான்றோர் பேரவை வழக்குரைஞர் கே. சந்துரு தமக்கு பேசக்கிடைத்த ஒரே ஒரு வாய்ப்பில் இந்த அரசு ஆணை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தொடர்புடையதே தவிர இதில் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளுக்கு ஒன்றும் பாதிப்பில்லை, அவர்களது கல்வி நிறுவனங்களை மூடும்படி இந்த ஆணை கூறவில்லை. எனவே மெட்ரிகுலேசன் நிர்வாகிகளை "பாதிக்கப்பட்ட" நபர்களாகக் கருதி இதில் வாதிகளாக சேர்க்கக் கூடாது, அவர்களுக்கு Locus standi கிடையாது என்ற உண்மையை எடுத்து இயம்பினார். ஆனால் நீதிபதிகள் தமிழ் வழிக் கல்வி கோருவோரை வெளியே அனுப்பிவிட்டு ஆங்கிலவழிக் கல்வி கோருவோரை அரவணைத்துக் கொண்டனர்.

மெட்ரிகுலேசன் நிர்வாகிகளுக்கு இவ்வழக்கைத் தொடுக்க உரிமையில்லை என்ற வாதத்திற்கு பதிலளித்த நீதிபதிகள், மெட்ரிகுலேசன் நிர்வாகிகள் வாதிகளாக ஆனதை தமிழக அரசே எதிர்க்கவில்லை என்று கூறினர். அத்துடன் நிற்காமல் அழுத்தம் திருத்தமாக ஆவேச தொனியில் மெட்ரிகுலேசன் நிர்வாகிகள் பெற்றோர்களும் ஆவார்கள். எனவே அவர்கள் பாதிக்கப்பட்ட தரப்பினர் என்று நாங்கள் திருப்தியடைகிறோம் என்றும் மொழிந்தனர் (தீர்ப்புரை பக்கம் 182) தமிழ் வழிக்கல்வி ஆதரவானவர்கள் தங்களை வழக்கில் சேர்த்துக் கொள்ளச் சொல்லும் போது அவர்களுக்கு அவ்வுரிமை இல்லை என்று நீதிபதிகள் மறுத்தார்கள். தமிழ் வழிக்கல்வி ஆதரவானவர்களுக்குப் பிள்ளைகளே

பிறக்கவில்லை என்றும் அவர்கள் பெற்றோரே அல்ல என்றும் மூன்று நீதிபதிகளும் முழு திருப்தியடைந்தார்கள் போலும்! வாழ்க அவர்களது ஆராய்ச்சி.

பி.டி. குமார் தொடுத்த வழக்கு முதலில் நீதிபதி சண்முகம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அவர் ஏற்கெனவே தமிழ் வழிக்காதரவாக தீர்ப்பளித்தவர் என்பதால் அவர் இதை விசாரிக்கக் கூடாது என்று மெட்ரிகுலேசன் தரப்பு வழக்குரைஞர் யு.என்.ஆர். ராவ். வாதிட்டார். அதை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் ஏற்றுக்கொண்டு நீதிபதி சண்முகத்தை நீக்கிவிட்டு மூவர் கொண்ட பெஞ்ச் ஏற்படுத்தினார்.

பி.டி. குமார் தலைமையிலான தமிழ்நாடு தமிழ் மற்றும் ஆங்கிலப் பள்ளிகள் சங்கம் சார்பாக இம்மூன்று நீதிபதிகள் அடங்கிய முழு அமர்வில் 24.2.2000 அன்று ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் இவ்வழக்கு முடியும்வரை தமிழ் வழிக் கொள்கையினை ஆதரிக்கும் தமிழக முதல்வர் உள்ளிட்டு யாரும் தமிழ் வழியை ஆதரித்துக் கூட்டங்கள் நடத்த அறிக்கைகள் விடத் தடை விதிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இம்மனுவை மூன்று நீதிபதிகளும் ஏற்றுக் கொண்டு வழக்கு முடியும்வரை தமிழ் வழிக் கல்விக்கு ஆதரவாகவோ எதிராகவோ அறிக்கைகள் விடவோ, பேசவோ கூடாது என்று ஆணையிட்டனர். மெட்ரிகுலேசன் முதலாளிகள் விருப்பப்படி இம்மூன்று நீதிபதிகளும் நடந்து கொண்டனர் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

திறந்த நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கில் எடுத்து வைக்கப்படும் வாதங்களை வெளியில் கூறக்கூடாது என்று சட்டம் எதுவும் இல்லை. இவ்வாறு நீதிபதிகள் அறிவித்ததன் மூலம் தடாச் சட்டத் தனி நீதிமன்றத்தின் ரகசிய விசாரணை போல் உயர் நீதி மன்ற விசாரணையை மாற்றிக் கொண்டனர். இந்த சனநாயக விரோதச் செயலுக்கும் தமிழ் நாட்டில் குறிப்பிடத்தகுந்த எதிர்ப்புகள் கிளம்பவில்லை.

## குழுவின் மீது குற்றம் சுமத்துதல்

இதனால் நீதிபதிகளின் ஒரு தலைச்சார்பான அணுகுமுறைகள் தீவிரமடைந்தன. தமிழ் வழிக்கல்வியை செயல்படுத்துவது குறித்துப் பரிந்துரைகள் வழங்க நீதிபதி மோகன் தலைமையில் தமிழக அரசு அமைத்த குழு தக்க குழு அல்ல என இந்நீதிபதிகள் தீர்ப்புரையில் கூறுகின்றனர். (தீர்ப்புரை பக் 41-46). உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ். மோகன், அவர் உச்சநீதிமன்றத்தில் ஏதோ ஒரு வழக்கில் தாய்மொழிக் கல்விக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தாராம்; அதனால் அவரைத் தமிழ் வழிக் கல்விக் குழுவில் தலைவராகப் போட்டிருக்கக் கூடாது என்று கூறுகிறார்கள். நீதிபதி மோகன் எந்தத் தீர்ப்பில் என்ன கூறினார் என்பதை விளக்காமல் மொட்டையாக ஏதோ ஒரு தீர்ப்பில் தாய்மொழிக்கு ஆதரவாகக் கருத்துக் கூறினார் என்று விமாசிபபது இம்மூவரின் ஒருத்லைச் சார்பான உள்நோக்கத்தையே அம்பலப்படுதததுகிறது.

நீதிபதி மோகன் குழு அமைக்கப்பட்டது தமிழ் வழிக் கல்வி தேவையா, தேவையில்லையா என்று ஆராய்வதற்கல்ல; தமிழ் வழிக்கல்வியை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை ஆராயவே!.

குழுவின் இன்னொரு உறுப்பினரான தமிழண்ணல் மீது பாய்கிறார்கள் மூன்று நீதிபதிகளும். தமிழ் வழிக்கல்வி கோரி பட்டினிப் போராட்டம் நடத்தியவர் எவ்வாறு ஆய்வுக்குழுவில் இருக்கலாம் என்று கேட்கிறார்கள். அரசு ஆணை 324 நாள் 19.11.99 என்ன கூறுகிறது என்பதை படித்து உள்வாங்கிக் கொள்ளும் பொறுமைகூட இம் மூன்று நீதிபதிகளுக்கும் இல்லை. தமிழ் வழிக்கல்வியை அறிமுகப்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது. (**A Committee Headed by Justice S. Mohan was constituted to study the introduction of Tamil as a Medium of Instruction from the Primary level to Higher level)** இதன் பொருள் தமிழை அறிமுகப்படுத்தலாமா வேண்டாமா என்று ஆராய்வது அல்ல, தமிழை எவ்வாறு அறிமுகப்படுத்தலாம் என்று ஆராய்வது என்பதாகும்.

ஆகவே தமிழ் வழிக் கல்வியைக் கோருகின்ற தமிழ் அறிஞராகவும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவராகவும் விளங்கக்கூடிய தமிழண்ணல் அவர்களை இக்குழுவில் சேர்த்தது தேவையும் பொருத்தமும் ஆகும். தமிழ் வழிக்கல்வியை அறிமுகப்படுத்துவது எவ்வாறு என்று கண்டறியும் குழுவில் ஆங்கிலப் பேராசிரியரை நியமித்திருந்தால் இம்மூவர் குழு (நீதிபதிகள்) எதிர்ப்புத் தெரிவித்திருக்கலாம், மாறாக தமிழறிஞரை சேர்த்ததற்கு முகம் சுழிக்கிறார்கள்.

கோரிக்கை வைப்பவரே முடிவெடுக்கும் குழுவில் உறுப்பினராக இருக்கக் கூடாது என்று கூறும் நீதிபதிகள் இதற்கு உச்ச நீதி மன்றத் தீர்ப்புகளை எல்லாம் மேற்கோள் காட்டுகிறார்கள். கோரிக்கை வைத்தவர் நடுவர் குழுவில் அல்ல, செயல்படுத்தும் குழுவில் இருப்பதில் என்ன தவறு? தொழிற் சங்கப் பிரதிநிதிகள் செயல்படுத்தும் குழுவில் இருப்பதில்லையா?

அடுத்து புலவர் இளங்குமரன் அவர்களை மோகன் குழுவில் சேர்த்தது குறித்து ஒரு எகத்தாளப் பார்வையுடன் நோக்குகிறது மூவர் குழு. தமிழ் அறிஞர்கள் சார்பாக இவர் சேர்க்கப்பட்டதாக சொல்லப்படுகிறதாம். அவ்வாறெனில் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளின் அறிஞர்கள் சார்பாக ஏன் மோகன் குழுவில் பிரதிநிதிகள் சேர்க்கப்படவில்லை என்று மூவர் குழு கேள்வி கேட்கிறது. (தீர்ப்புரை பக். 46) இம்மூவரும் இந்தி, குஜராத்தி போன்ற மொழிகளை ஏன் விட்டு விட்டார்கள் என்று தெரியவில்லை. மற்ற மூன்றும் அண்டை மாநில மொழிகள் என்று இவர்கள் கூறிக் கொண்டாலும் மொழி வாரி மாநில அமைப்பை இந்நீதிபதிகள் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்பது இவர்களது முழுத் தீர்ப்பையும் படித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்கும்.

இந்த ஆங்கில கிணற்றுத் தவளைகள், ஆந்திர, கேரள, கர்நாடகப் பகுதிகளடங்கிய பழைய சென்னை மாகாணம் என்றே இன்றும் தமிழ்நாட்டைக் கருதுகிறார்கள் போலும். இன்னொன்றும் விளங்குகிறது. இம்மூவரும் தமிழைத் தவிர வேறு எந்த மொழிக்கும் ஆதரவாக இருப்பார்கள் என்பதே அது. கர்நாடகத்திலோ, கேரளாவிலோ அம் மாநில மொழியைக் கல்வி மொழியாக்கும் பரிந்துரைக்குழுவில் தமிழறிஞர்களை சேர்ப்பார்களா? அம் மாநிலத்தில் அவ்வாறு ஒரு நீதிமன்றம் கூறினால் அம்மக்கள் சும்மா இருப்பார்களா?

இந்நீதிபதிகள் மோகன் குழுவில் தமிழறிஞர்களை நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போது, குழந்தை உளவியல் வல்லுநர்களையும், மூளை நரம்பியல் வல்லுநர்களையும் ஏன் இக்குழுவில் சேர்க்கவில்லை என்று கேட்கிறார்கள் (தீர்ப்புரை பக்.47) ஆனால் அவர்களே தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் கூறியதாக ஒரு கருத்தை எடுத்துக் காட்டி அதைத் தங்களது தமிழ் வழிக் கல்விக்கு எதிரான தீர்ப்பிற்கு ஒரு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். ஒரு குழந்தை இரண்டரை வயதிலிருந்து நாலரை வயதுக்குள் தனது தாய்மொழியில் கற்க வேண்டும். அதன் பிறகு எந்த மொழியிலும் அது கற்கலாம் என்பதே நீதிபதிகள் எடுத்துக் காட்டும் கி.ஆ.பெ. யின் கூற்று. இங்கு மட்டும் ஒரு தமிழறிஞர் குழந்தை உளவியல் வல்லுநராக, மூளை நரம்பியல் நிபுணராக இருக்க முடியும் என்கிறது மூவர் குழு. அதாவது தமிழ்க்குழந்தை 5 வயதுக்கு மேல் தனக்கு அயல் மொழியாக உள்ள ஆங்கிலத்தில் கற்கலாம் என்ற தங்களது கருத்தை நிலை நாட்டத் தந்திரமாக கி.ஆ.பெ. யை பயன்படுத்திக் கொள்கிறார்கள் நீதிபதிகள்.

## *ஐ.நா. சாசனம் கூறுவது என்ன?*

தமிழ்வழிக் கல்விக்கு எதிராக மூவர் குழு வைக்கும் வாதங்களில் மிக மையமானது, தொடக்கக்கல்வி என்பது பெற்றோர் விருப்பத்தைப் பொறுத்தது என்பதாகும். ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைப் பிரகடனம் மாணவர்களின் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோரைச் சேர்ந்தது என்று கூறுவதாகவும், தமிழக அரசின் ஆணை இந்த பெற்றோர் உரிமையை மறுத்து விட்டதாகவும் தமிழ் வழிக் கல்வியை எதேச்சாதிகாரமாக திணித்து விட்டதாகவும், மூவர் குழு பரந்துபட பேசுகிறது. தீர்ப்பின் முடிவுச் சுருக்கத்திலும் இதை எடுத்துக் காட்டுகிறது. (தீர்ப்புரை பக் 87,185)

ஈரை பேனாக்கி பேனைப் பெருமாளாக்கி என்றுஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல அரைகுறை உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு தர்க்கக் கோட்டை கட்டுவதில் வல்லவர்களான நீதிபதிகள் மூவரும் ஐ.நா.மன்ற சாசனத்தின் கருத்தைத் திரித்து ஆதாரம் காட்டுகிறார்கள்.

நீதிபதிகள் குறிப்பிடும் மனித உரிமை சாசன விதி 26(3) வாசகத்தை அசலாக அப்படியே தருகிறோம்.: **Parents have a prior right to choose the kind of education that shall be given to their children,** இதன் பொருள், தங்கள்

குழந்தைகளுக்கு எந்த வகைக் கல்வி வழங்க வேண்டும் என்று தெரிவு செய்யும் முதல் உரிமை பெற்றோருக்கு உண்டு என்பதாகும். இதில் பயிற்று மொழியை தேர்ந்தெடுக்கும் உரிமை என்பதாக எந்த வாசகமும் இல்லை **Kind** என்ற சொல் வகை என்ற பொருளில்தான் இங்கு பயன்படுத்தப்படுகிறது. **Kind** என்ற சொல்லுக்கு மொழி என்ற பொருள் எந்த அகரமுதலியிலும் கிடையாது.

எந்த வகைக் கல்வியை தேர்ந்தெடுப்பது என்ற உரிமை பெற்றோருக்கு வழங்கப்படுகிறது. மருத்துவம், பொறியியல், கலையியல், வேளாண்மை, சட்டம் போன்ற பல வகைப் படிப்புகள் உள்ளன. இவற்றில் எதை தேர்ந்தெடுப்பது என்ற உரிமை குறித்துதான் ஐ.நா. உரிமை சாசனம் பேசுகிறது.

ஆங்கிலத்துக்கு வக்காலத்து வாங்கும் தங்களது வாதத்திற்கு வசதியாக வலிந்து திரித்து பொருள் கூறி பயிற்று மொழி பற்றி ஐ.நா. சாசன விதி 26(3) பேசுவதாக இந்நீதிபதிகள் கூறும்போது அவர்களின் தரம் பற்றி ஐயம் எழுகிறது. ஐ. நா. சாசன விதி 26-ஐ பூதக்கண்ணாடி போட்டுப் பார்த்து இல்லாத எழுத்துக்களை கூட்டிப்படித்து சொல்லாத பொருளைச் சொல்லும் இந்த நீதிபதிகள், இதே விதி 26-ல் உட்பிரிவு (1) கூறுவதை ஏன் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. (1) ஐப் படித்துவிட்டுத்தானே (3) ஐப் படித்திருக்க வேண்டும். அந்த (1) என்ன கூறுகிறது **Everyone has the right to education. Education shall be free, at least in the elementary and fundamental stages. Elementary education shall be compulsory.** குறைபட்சம் அடிப்படை மற்றும் தொடக்கக் கல்வியை கட்டாயமாக, இலவசமாக வழங்க வேண்டும் என்று இந்த விதி கூறுகிறது.

தமிழ் வழிக் கல்வி ஆணைக்கு எதிராக வழக்குத் தொடுத்த அதி உத்தமர்களான, கல்வி சனநாயகத்தின் கர்த்தாக்களான மெட்ரிக்குலேசன் பள்ளி முதலாளிகள் தொடக்கக் கல்வியை இலவசமாகத் தருகிறார்களா என்ற கேள்வியை இந்த நீதிபதிகள் கேட்டார்களா? ஐ.நா. சாசனம் பற்றி அதிக அக்கறையோடு, இல்லாத அர்த்தத்தை இட்டு கட்டிக் கொண்டு வேர்க்க விறுவிறுக்க பல்வேறு தீர்ப்புக்களை எடுத்துக் காட்டும் இந்த நீதிபதிகள், தொடக்கக் கல்வியை இலவசமாக கொடுக்க வேண்டும் என்பதில் ஏன் அக்கறை காட்டவில்லை?

கல்விக் கட்டணம் என்ற பெயரில், நன்கொடை என்ற பெயரில் பெற்றோர்களைக் கொள்ளையடிக்கும் மெட்ரிகுலேசன் முதலாளிகள் அரசு நிர்ணயித்த சம்பளத்தில் கால் பங்குகூட ஆசிரியர்களுக்குத் தருவதில்லை. ஒரு அறிவுரை என்ற அளவில் இலவசக் கல்வி பற்றி ஒரு வரியாவது ஐ.நா சாசனம் விதி 26 பற்றி பேசும் போது நீதிபதிகள் கூறியிருக்கலாம். கூறாதது அவர்களின் பக்கச் சாய்வைக் காட்டுகிறது.

## *பெற்றோர் உரிமையா?*

இனி, பயிற்று மொழியைப் பெற்றோர் தேர்ந்தெடுக்கும் உரிமை பற்றி

பார்பபோம். ஒரு நாட்டில் அல்லது ஒரு மாநிலத்தில் நடைமுறையில் உள்ள வெவ்வேறு பயிற்று மொழிகளில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் உரிமையா அல்லது பெற்றோர் விரும்பும் ஏதோ ஒரு மொழியை பயிற்று மொழியாக தேர்ந்தெடுக்கும் உரிமையா என்ற கேள்வி இங்கு எழுகிறது ஜிம்பாப்வே மொழியை பயிற்று மொழியாக பெற்றோர் தேர்ந்தெடுத்தால் அம் மொழியை வழங்க வேண்டுமா? வழங்க முடியுமா?

கல்வி வல்லுநர்களின் அறிவுரையின்படி அரசு வரையறுக்கும் பயிற்று மொழிகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமைதான் பெற்றோருக்கு இருக்க முடியுமேதவிர பெற்றோர் விரும்புகின்ற மொழியையெல்லாம் அரசு வழங்க வேண்டும் என்ற உரிமை இருக்க முடியாது. தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள “அ” மற்றும் “ஆ” மொழிகளிடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமைதான் பெற்றோருக்கு உண்டு. பெற்றோர் உரிமை என்பது இந்த வரம்புக்கு உட்பட்டதுதான். இந்த வரம்பைத் தீர்மானிப்பது கல்வியாளர்களும், அரசும்தானே தவிர பெற்றோர் அல்லர்.

அரசின் உதவி பெறாமல் சொந்தப் பணத்தில் கல்வி பெறுகிறோம் என்று காரணம் காட்டி கல்வித் திட்டத்தை ஒருவர் சொந்தமாக முடிவு செய்து கொள்ளமுடியாது. அவ்வாறு முடிவு செய்ய முடியுமெனில் அவர் அரசு முத்திரையுடன் சான்றிதழை நாட வேண்டியதில்லை. வேலை வாய்ப்பு, உயர் கல்வி போன்றவற்றிற்கும் அவர் அரசை சார்ந்திருக்க வேண்டியதில்லை.

தமிழக அரசின் ஆணையில் தமிழ் அல்லது தாய்மொழி என்றிருப்பதால் எது தாய்மொழி என்ற ஆராய்ச்சியில் நீதிபதிகள் இறங்கி அதை எப்படி கண்டுபிடிப்பது என்ற சுழலில் சிக்கி வம்பு வேண்டியதில்லை, ஆங்கிலமே இருந்து விட்டுப் போகட்டும் என்ற முடிவுக்கு வருகிறார்கள். தாய்மொழி என்பது தாயார் பேசக்கூடிய மொழியோ, தந்தையார் பேசக்கூடிய மொழியோ அல்ல என்றும் தாயும் தந்தையும் வெவ்வேறு மொழி பேசுபவராக இருந்தால் குழந்தை யார் மொழியைப் பேசும் என்றும் கேள்வி கேட்டு, குழந்தை எந்த மொழியில் அதிகம் பேசுகிறதோ அந்த மொழிக்கே அதன் தாய்மொழி தகுதியைத் தர வேண்டும் என்றும் நீதிபதிகள் வாதிடுகிறார்கள்.

இயற்கைக்குப் புறம்பாக ஆங்கிலத்தில் பேச சில குடும்பங்களில் குழந்தைகளை வற்புறுத்துகிறார்கள். அந்த வைத்துக் கொண்டு ஆங்கிலம் தான் குழந்தையின் முதல் மொழி என முடிவு செய்யக் கூடாது என்று அரசு தரப்பு வழக்குரைஞர் சாந்தி பூசன் கூறியதை நீதிபதிகள் ஏற்கவில்லை.

இந்த நீதிபதிகள் ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்குவதற்காக எந்த அளவுக்குப் பகுத்தறிவுக்குப் புறம்பாகச் செல்கிறார்கள் என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு:

பள்ளியில் குழந்தையை சேர்க்கும்போது அந்த குழந்தையின் தாய்மொழியை அல்லது முதல் மொழியை குழந்தையின் வாயிலாக அறிந்து கொள்ள முடியாது. கூச்சத்தின் காரணமாக, வெட்கத்தின் காரணமாக குழந்தைகள் பேசாது. குழந்தையின் பெற்றோர்தான் அதன் முதல் மொழியை சொல்லியாக வேண்டும். இதனால் குழந்தையின் தாய்மொழிஅல்லது முதல் மொழி குறித்து தெரிவிக்க வேண்டியவர் பெற்றோரே தவிர குழந்தையல்ல (தீர்ப்புரை பக்.61)

அடுக்குமாடி வீடுகளில் குடியிருக்கும் குழந்தைகளுக்கு பொது மொழி, முதல் மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கிறதாம். அதே போல் பல மாநிலங்களிலிருந்து வந்து இங்கு வேலை பார்ப்போர் குழந்தைகளுக்கு ஆங்கிலம்தான் முதல் மொழியாக இருக்கிறதாம். எனவே ஆங்கில வழிக் கல்விதான் சரியான திட்டம் என்று நீதிபதிகள் முடிவுக்கு வருகிறார்கள்.

ஆறு கோடி தமிழ் மக்களில் அடுக்குமாடி வீட்டு ஆங்கிலக்காரர்களும் அயல் மாநில ஆங்கிலக் காரர்களும் எத்தனை விழுக்காட்டினர் என்ற விளக்கத்தை நீதிபதிகள் கொடுக்கவில்லை. மாறாக கோவையில் இவர்கள் வசதிக்கு மூன்று மெட்ரிகுலேசன் பள்ளிகளை எடுத்துக் கொண்டு அவற்றில் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மராத்தி போன்ற மொழி பேசுவோர் கணிசமாக இருக்கிறார்கள் என்று புள்ளி விபரம் கொடுத்து, இவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி கொடுப்பதுதானே பொருத்தம், அவரவர் தாய்மொழியில் கொடுக்க முடியுமா என்று நீதிபதிகள் கேட்கிறார்கள். நூற்றுக்கு நூறு என்ற அளவிலும் நூற்றுக்கு தொண்ணூறு விழுக்காடு என்ற அளவிலும் தமிழைத் தாய் மொழியாக அல்லது முதல் மொழியாக கொண்டுள்ள குழந்தைகள் ஏராளமான மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் ஆங்கில வழியில் படிக்க நேர்கிறது. அப்பள்ளிகளில் அனைவருக்கும் பொது மொழி தமிழே. கிட்டத்தட்ட 95 விழுக்காடு மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் இதுதான் நிலைமை. மிகமிகச் சிறு எண்ணிக்கையில் தெலுங்கு, மலையாளம், மராத்தி, இந்தி பேசுகின்ற குழந்தைகள் படிக்கின்ற மெட்ரிகுலேசன் பள்ளிகளை பூதக் கண்ணாடி போட்டு தேடிக் கண்டுபிடித்து அதுதான் தமிழ் நாட்டின் சராசரி என்பது போல் காட்டும் இந்த நீதிபதிகள் 95 விழுக்காடு மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் தமிழைத் தாய் மொழியாக அல்லது முதல் மொழியாகப் பேசுகின்ற குழந்தைகள் வாயில் ஆங்கிலத்தை திணிக்கும் அநீதி பற்றி ஏன் கவனத்தில் கொள்ளவில்லை? ஏனெனில் அவர்கள் ஒரு தலைச் சார்பாக தீர்ப்பெழுத முடிவெடுத்து விட்டார்கள்.

## *தமிழர்களின் தேசிய மொழி*

இங்கு அடிப்படையான ஒரு செய்தியை கவனத்தில கொள்ள வேண்டும். இந்தியா மொழி வாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு மொழி பேசும் ஒரு தேசிய இனத்திற்கு ஒரு தாயகம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அமைந்த மொழிவாரித் தாயகத்திற்கு சட்டப் பேரவையும், தனி அதிகாரப் பட்டியலும், தனி அலுவல் மொழியும் இருக்கின்றன. இந்த அடிப்படை

உண்மையை எந்த இடத்திலும் மூன்று நீதிபதிகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவே இல்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று அதன் கூட்டாட்சித் தன்மை என்று உச்ச நீதிமன்றமும் கூறியிருக்கிறது; சட்டவியல் அறிஞர்களும் கூறுகிறார்கள்.

இந்த அம்சங்களை மூன்று நீதிபதிகளும் புறக்கணித்தது மட்டுமல்ல அரசுத் தரப்பு வழக்குரைஞர்களும் இவற்றை வாதத்தில் வைக்கவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிகள் பதினெட்டு இருக்கின்றன. இந்தப் பட்டியலில் ஆங்கிலம் கிடையாது.

எட்டாவது அட்டவணையில் இல்லாத ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கும் நீதிபதிகள் அப்பட்டியலில் உள்ள தேசிய மொழியான தமிழை எட்டி உதைக்கின்றனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டின் அலுவல் மொழி தமிழ்தான். தமிழ்நாட்டின் அலுவல் மொழியை தமிழ்நாட்டு குடிமக்கள் படிக்க வேண்டியதில்லை என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான செயல்.

அரசமைப்புச் சட்டவிதி 345 ன் கீழ் தமிழக சட்டப்பேரவை தமிழ்நாட்டின் அலுவல் மொழியாக தமிழை 1956 ஆம் ஆண்டே சட்டமாக்கியுள்ளது. சட்டபூர்வமான தமிழக அலுவல் மொழியான தமிழை தமிழ்நாட்டுக் குழந்தைகள் அதாவது குடிமக்கள் படிக்கத் தேவையில்லை என்று ஒரு உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்தால் அந்நீதிமன்றம் அரசமைப்புச் சட்டத்துக்கு கட்டுப்பட்டதா . ஆங்கில வழிக் கல்வி வணிகர்களுக்குக் கட்டுப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது.

தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் தமிழ் மொழி கற்பதும், தமிழ் மொழியில் கற்பதும் கட்டாயமாக இருக்க வேண்டும். ஆங்கிலம் போன்ற பிற மொழிகளைக் கற்பது அவரவர் விருப்பத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

இங்கிலாந்து ஆங்கிலேயர்களின் தாயகம் என்றாலும் அங்கு பல மொழி பேசும் பல இன மக்கள் கணிசமாக வாழ்கிறார்கள். ஆனால் அங்கு ஆங்கில மொழிப் பாடமும். ஆங்கில வழிக் கல்வியும் கட்டாயம். பிற மொழிகள் கற்பது அவரவர் விருப்பம். பிரான்சு நாட்டில் தமிழர்கள் உள்ளிட்ட முன்னாள் காலனி மக்கள் பல்வேறு மொழி பேசுவோர் வாழ்கிறார்கள். ஆனாலும் அங்கு பிரெஞ்சு மட்டுமே கட்டாயக் கல்வி மொழியாக இருக்கிறது. ஜெர்மனியில் ஜெர்மன், ரஷ்யாவில் ரஷ்யன், சீனாவில் சீனம் என அவரவர் தாயகத்தில் அவரவர் தாய்மொழியே கட்டாயக் கல்வி மொழியாக உள்ளது. அங்கெல்லாம் பெற்றோர் விருப்பத்திற்கேற்ப கல்வி மொழி மாற்றப்படுவதில்லை.

தமிழ்நாட்டில் தமிழ் கட்டாயக் கல்வி மொழியாக இருக்க வேண்டியதில்லை என்று மூவர் குழு கூறியிருப்பது தமிழர் தாயகத்தை

மறுதலிபபது மட்டுமல்ல. தமிழரின் முகவரியாய் உள்ள தமிழை அழிக்கும் செயலாகும்

தமிழ் வழிக்கல்வி செயலாக்கம் குறித்து பரிந்துரை வழங்க நியமிக்கப்பட்ட மோகன் குழு மெட்ரிகுலேசன் நிர்வாகிகளிடம் கருத்துக் கேட்கவிலலை என்று நீதிபதிகள் குறை கூறுகிறார்கள். மோகன் குழு மூன்று நாட்கள் எல்லா தரபபினரையும் கருத்துக் கூற அழைத்தது. இதற்கான விளம்பரம் செய்தித்தாள்களில் கொடுக்கப்பட்டது (1999 மே 19-21) உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்த மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கப் பொதுச் செயலாளர் பி.டி. குமார் உள்ளிட்டு மெட்ரிகுலேசன் தரப்பிலிருந்து ஏராளமானோர் வந்து எழுத்துப் பூர்வமாகவும் வாயமொழியாகவும் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர். இதைக் கருத்தில் கொள்ளாமல் மெட்ரிக்குலேசன் பள்ளி நிர்வாகிகளின் கருத்தை மோகன் குழு கேட்கவில்லை என்று நீதிபதிகள் கூறுவது கருப்பு கவுனுக்குள் எல்லாவற்றையும் மறைதது இருட்டாக்கி விடலாம் என்ற நினைப்பிலா என்று தெரியவில்லை.

அடுத்து மோகன் குழுவில் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் தரப்பில் பிரதிநிதிகளைச் சேர்க்காதது குறை என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. தமிழ் வழிக் கல்வியை செயல்படுத்தும் குழுவில் ஆங்கில வழிக் கல்விப் பிரதிநிதிகளைச் சேர்க்க வேண்டிய அவசியம் என்ன? தமிழ் வழிக் கல்வியை கொண்டு வரலாமா வேண்டாமா என்று ஆராய்வதல்ல மோகன் குழுவின் வேலை. தமிழ் வழிக் கல்விக்கான சட்டம் 1956 ஆம் ஆண்டிலேயே இயற்றப்பட்டு அது நடைமுறையில் இருக்கிறது. இந்த சட்டத்தை செயல்படுத்துவதற்கான வழி முறைகளை ஆராயும் குழுவில் ஆங்கில வழிக் கல்வி நிர்வாகிகள் இடம் பெறுவது பகுத்தறிவுக்குப் பொருத்தமானது இல்லை.

## சிறுபான்மை மக்கள்

சிறுபான்மை மக்கள் உரிமையை அரசு ஆணை பாதிப்பதாக தீர்ப்பில் கூறியுள்ளார்கள் நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ள அரசமைப்புச் சட்டவிதி 30(1) எல்லா மத மற்றும் மொழிச் சிறுபான்மையினரும் அவர்கள் விருப்பத்திற்கேற்ப கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொள்ளவும் அவற்றை நிர்வகிக்கவும் உரிமை உண்டு என்று கூறுகிறது. இது அரசின் பயிற்று மொழித் திட்டத்தையோ, மொழி வாரி மாநிலத்தின் அலுவல் மொழியையோ புறக்கணிக்கும் அதிகாரத்தை சிறுபான்மை நிறுவனங்களுக்கு வழங்கிடவில்லை. இச் சிறுபான்மை நிறுவனங்கள் அரசின் மொழிக் கொள்கையை செயல்படுத்திக் கொண்டே தங்கள் விருப்பத்திற்கு இன்னொரு மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கு தடை ஏதும் இல்லை. தமிழை மொழிப்பாடமாகவும், பயிற்று மொழியாகவும் ஏறறுக் கொண்டு உருது மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கு தடை ஏதும் இல்லை.

அரசமைப்புச் சட்டத்தின் இந்த விதி மொழிச் சிறுபான்மையினர் தங்கள்

தாய்மொழியைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை வழங்குகிறதே தவிர அயல் மொழியான ஆங்கிலத்தைப் பாதுகாக்கும் உரிமை வழங்கவில்லை. மூன்று நீதிபதிகளும் மெட்ரிகுலேசன் முதலாளிகளும் கண்ணீர் விட்டுக் கதறும் மொழிச் சிறுபான்மையினர் யாருக்கும் ஆங்கிலம் தாய்மொழி இல்லை. மூவர் குழு குருட்டுத்தனமாக விதி 30(1) க்கு புறம்பான ஆணை என்று தமிழ்வழிக்கல்வி ஆணையை கூறுகிறது.

## *வாழ்வுரிமை*

அரசு ஆணை அரசமைப்புச் சட்டவிதி 21க்கு புறம்பானது என்று நீதிபதிகள் கூறுகின்றார்கள். யாருடைய உயிரையும் தனி நபர் உரிமையையும் சட்டமுறைகளுக்குப் புறம்பாக பறிக்கக்கூடாது என்பது இவ் விதியாகும். அதாவது வாழ்வுரிமையை இவ்விதி வலியுறுத்துகிறது. வாழ்வு என்பது கண்ணியமான வாழ்க்கை; கண்ணியமான வாழ்க்கைக்கு கல்வி அவசியம்; எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

இதுவே இவ்விதி குறித்து உச்ச நீதிமன்றம் கொடுத்துள்ள விளக்கம். ஆங்கிலக் கல்வி கற்றால்தான் கண்ணியமான வாழ்வு அமையும் என்று மூவர் குழு ஆங்கிலத்தோடு இவ்விதியை முடிச்சுப் போடுகிறது. விதி 21 கண்ணியமான வாழ்வைக் குறிக்கிறது என்பது வரை சரி. அதற்கு மேல் விரிவுரை என்ற சங்கிலி போட்டு ஆங்கிலத்தின் காலடியில் பிணைப்பது அநீதியானது, உள்நோக்கம் கொண்டது.

தமிழ் வழியில் கற்றவர்கள் கண்ணியமான வாழ்க்கை நடத்த வில்லையா? ஏவுகணை விஞ்ஞானி அப்துல் கலாம் பதினோறாம் வகுப்புவரை தமிழ் வழியில்தான் படித்தேன் என்கிறார். கண்ணியமான வாழ்வுக்கு அவர் எடுத்துக்காட்டு இல்லையா? இன்று உயர்நீதி மன்றத்திலும் மாவட்ட நீதி மன்றங்களிலும் நீதிபதிகளாக உள்ள பலர் பதினோறாம் வகுப்புவரை தமிழ் வழியில் படித்தவர்கள்தாம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளை தமிழ் வழியில் எழுதி பலர் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தமிழ் கண்ணியமான வாழ்வு கொடுக்கவில்லையா?

கணிப்பொறிக்கு எந்த மொழியும் சொந்த மொழி கிடையாது. எந்த மொழியிலும் அதை இயக்கலாம். தமிழ் மென்பொருள் உருவாக்குவோர் ஏராளமாக சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தமிழ் கண்ணியமான வாழ்க்கை தரவில்லையா? ஜப்பானியருக்கும் ஜெர்மானியருக்கும், ரஷ்யருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும், சீனருக்கும் அவரவர் தாய்மொழி கண்ணியமான வாழ்வு தரும்போது தமிழனுக்கு தமிழ் கண்ணியமான வாழ்வு தராதா? அப்படியே தமிழனுக்கு தமிழ் கண்ணியமான வாழ்வு தராத சூழ்நிலை நிலவினால் அந்த சூழ்நிலையை மாற்றியமைப்பது தான் அறிவாளியின் செயலாக, தமிழனின் செயலாக இருக்க வேண்டும்.

மூன்று நீதிபதிகளும் அறிவுக்கும் தமிழ் இனத்திற்கும் பொருந்தாத வாதத்தை முன் வைத்திருக்கிறார்கள். மேய்ச்சல் பிராணியா நாம், புல்வெளி நீளும் வரை மேய்ந்து கொண்டே செல்வதற்கு!

## விதி 14

அரசமைப்புச் சட்ட விதி பதினான்கிற்குப் புறம்பாக உள்ளது அரசாணை என்று மூவர்குழு கூறுகிறது. சட்டத்தின் முன்பாக யாருக்கும் சமத்துவத்தை மறுக்கக் கூடாது என்கிறது இவ்விதி.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளும் ஆங்கில வழியில் நடக்க விதி விலக்குக் கொடுக்கிறது அரசாணை. எனவே சட்டத்தின் முன் சமத்துவம் பேணப்படவில்லை என்கிறது தீர்ப்பு.

ஆங்கிலோ இந்திய மொழிச் சிறுபான்மையினர்க்கு அரசமைப்புச் சட்டப்படி சலுகை அளிக்க வேண்டியிருப்பதால் அவர்கள் தம் தாய்மொழியில் நடத்தும் பள்ளிகளுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டது. இது விதி 14க்கு முரணானதல்ல. விதி 30(1)க்கு உட்பட்டது இது. சிறுபான்மையினர்க்கு சலுகை அளிக்கவில்லை என்று வாதம் புரியும் இதே நீதிபதிகள் ஆங்கிலோ இந்தியச் சிறுபான்மையினர்க்கு அளித்த சலுகையை எதிர்க்கிறார்கள் முன்னால் போனால் கடிப்பது பின்னால் வந்தால் உதைப்பது என்பதாக இவர்கள் வாதம் அமைந்துள்ளது.

சி.பி.எஸ்.இ. பள்ளிகள் நடுவண் அரசின் நேரடிக்கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகள் என்ற காரணத்திற்காக விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கலாம். இவ்விதி விலக்கு தேவை இல்லை என்பது நமது கருத்து.

இது ஒருபக்கம் இருக்க, மாநில அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளுக்கிடையே பாரபட்சம் - சமத்துவ மின்மை காட்டப்படவில்லை என்பது தான் இங்கு கவனிக்கத் தக்கது.

*இயைபற்ற அரசமைப்பு விதிகளையெல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டு, பொருந்தாத உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை வைக்கோல் போர் போல் குவித்து வைத்துக் கொண்டு 186 பக்கங்களுக்கு நீட்டி இப்பெரிய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.*

## மெட்ரிகுலேசன் முதலாளிகளை விஞ்சிய நீதிபதிகள்

மூன்று நீதிபதிகளும் மெட்ரிகுலேசன் முதலாளிகளையும் விஞ்சி தமிழுக்கெதிராகவும் ஆங்கிலத்திற்காதரவாகவும் வாதம் செய்து தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

மெட்ரிகுலேசன் நிர்வாகிகள் தங்கள் வாதுரையில், தமிழ் வழிக் கல்வி

ஆணை இது வரை உள்ள மெட்ரிக் பள்ளிகளைப் பாதிக்காமல் இனி தொடங்கப்படும் மெட்ரிக்பள்ளிகளுக்குப் பொருந்தும் என்று விதி விலக்குக் கொடுத்திருந்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். (தீர்ப்புரை பக்கம் 24 கடைசிப் பத்தி)

இனி தொடங்கும் பள்ளிகளுக்கோ பொருந்தும் என்ற நிபந்தனை கூட இல்லாமல் வழக்குத் தொடுத்தவர்கள் கோரிக்கையையும் தாண்டி, முற்றிலுமாக அரசாணையைத் தள்ளுபடி செய்துள்ளது மூவர் குழு.

*கர்நாடகாவில்*

கர்நாடகாவில் கன்னடத்தை ஒரு மொழிப் பாடமாக உயர்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டும் என்ற ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. அவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் கர்நாடக அரசின் ஆணைசெல்லும் என்று தீர்ப்பளித்தது. இது பற்றி தமது தீர்ப்புரையில் விவாதிக்கும் நீதிபதிகள் (பக்கம் 167-169), அங்கு கன்னடம் மொழிப்பாடமாக மட்டும் தான் கட்டாயப்படுத்தப்பட்டது பயிற்று மொழியாக அல்ல என்று கூறுகிறார்கள்.

அதை வைத்துக் கொண்டாலும் தமிழ் வழிக் கல்வி ஆணையில், தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கட்டாயம் படிக்க வேண்டும் என்ற அம்சம் உள்ளது. அதை மட்டுமாவது மூன்று நீதிபதி களும் ஏற்றுக் கொண்டு, பயிற்று மொழி என்ற அம்சம் செல்லாது என்று தீர்ப்புக் கூறியிருக்கலாம் அல்லவா? ஏன் அவ்வாறு செய்யவில்லை? உச்சநீதி மன்றத்தீர்ப்பிற்குப் புறம்பாக, தமிழ்நாட்டின் அலுவல் மொழியான தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கூடி படிக்கக் கூடாது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். பொருந்தாத உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை மற்ற இடங்களில் எல்லாம் வாரி வழங்கியிருக்கும் நீதிபதிகள் தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் எடுத்துக்காட்டிய கட்டாயக் கன்னட மொழிப்பாடம் தொடர்பான மேல் நீதி மன்றத் தீர்ப்பை அடியொற்றி கட்டாயத் தமிழ் மொழிப் பாடத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்காதது ஏன்?

இங்குதான் நீதிபதிகளின் தமிழ் எதிர்ப்பும் ஆங்கிலப் பற்றும் ஜிகினா கடிதாசி போல் மின்னி கண்கூசச் செய்கிறது.

இதற்கொரு சப்பைக் கட்டு கட்டுகிறார்கள் இந்நீதிபதிகள். கட்டாயக் கன்னட மொழியை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடந்த போது கர்நாடக அரசுத் தலைமை வழக்கறிஞர் கன்னடம் படிக்கும் பிறமொழி மாணவர்களுக்கு 15 மதிப்பெண் கருணை மதிப்பெண்களாகக் கன்னடப் பாடத்தில் சேர்த்துப் போடப்படும் என்றார். இதனால் உச்ச நீதிமன்றம் திருப்பதியடைந்து கன்னடக் கட்டாய மொழி ஆணை செல்லும் என்று தீர்ப்பளித்தது.

அது போல், தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர், கருணை மதிப்பெண் பற்றி எதுவும் கூறவில்லை என்கிறார்கள் நீதிபதிகள். அவ்வாறு ஒரு கேள்வியை இந்நீதிபதிகளே, தலைமை வழக்குரைஞரிடம் எழுப்பி விடை பெற்றிருக்கலாமே! ஆங்கிலத்துக்குச் சார்பாக அமைந்திருந்தால் அவ்வாறு கேள்வி எழுப்பியிருப்பார்கள். தமிழுக்குச் சார்பாக எவ்வாறு கேள்வி எழுப்புவார்கள் இவர்கள்?

தமிழக அரசுத் தலைமை வழக்கறிஞர் செத்தவன் வாயில் வெற்றிலை வைத்தது போல் வாதாடியவர். அவர், தானாகத் துடிப்புடன் செயல்படமாட்டார் அல்லவா? ஏனெனில் தமிழக அரசுக்கோ, தமிழ் வழிக் கல்வி ஆணையைக் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை கிடையாது.

தேர்தல் வரப்போகிறது. ஆங்கில விரும்பிகள் ஆங்கில வியாபாரிகள் அனைவரிடமும் வாக்குகள் இருக்கின்றன என்ற கவலை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு இருக்கிறது; தமிழ் வழிக் கல்வி முகாமில் உறுதியாக நிற்காமல் மதில்மேல் பூனையாக அவர் மாறிவிட்டார். அதனால் தான் இன்று வரை இத்தீர்ப்பு குறித்து அவர் கருத்து எதுவும் கூறவில்லை.

தமிழ் வழிக் கல்வி முகாமில் வாக்குகள் இல்லையா என்று கேட்கக் கூடும். இவர்கள் திட்டிக்கொண்டே தி.மு.க.வுக்கு வாக்குப் போடக் கூடியவர்கள் என்பது அவர் கணக்கு.

## *தமிழக அரசின் தடுமாற்றங்கள்*

தமிழக அரசு நெஞ்சத்தூய்மையோடு தமிழ் வழிக் கல்வி ஆணையைப் போட்டதா என்று கேட்டால் ஆம் என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லை. எல்லாமே மோகன் குழு பரிந்துரைப்படி தான் செய்ததாக ஆணையில் குறிப்பிடும் அரசு, மோகன் குழு சட்டம் இயற்றச் சொன்னதே, அதை ஏன் செயல்படுத்தவில்லை. வெறும் ஆணை போட்டது ஏன்?

தமிழ்ச் சான்றோர் பேரவை மற்றும் தமிழ் அமைப்புகளின் போராட்டங்களாலும் அவற்றிற்குக் கிடைத்த மக்கள் ஆதரவாலும் சஞ்சலப்பட்டு, தமிழுக்கும் வாக்குக் கிடைக்கும் போல் இருக்கிறது. நாம் செய்யவில்லை எனில் நமது தமிழ் முகம் சிதைந்து விடும் என்று கருதி தி.மு.க. அரசு இழுபறியாக தமிழ் வழிக் கல்விக்கு அதுவும் ஐந்தாம் வகுப்பு வரைக்கும் ஓர் ஆணை பிறப்பித்தது.

மோகன் குழுவில் வா.செ. குழந்தை சாமியைப் போட்டது கட்டுச் சோற்றில் பூனையை வைத்துக் கட்டிய போன்ற செயலாகும். வா.செ. குழந்தை சாமி ஒரு பம்மாத்துப் பேர்வழி. உயர் கல்வியில் குறிப்பாகப் பொறியியல் கல்வியில் தமிழ் வந்து விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளவர்.

1992 - ஆம் ஆண்டு வா.செ.கு. இந்திராகாந்தி திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருந்தபோது கொடுத்த அறிக்கையை மூன்று நீதிபதிகளும் எடுத்துக்காட்டி, ஆமையைப் புரட்டிப் போட்டு அடிப்பது போல் அடித்துள்ளார்கள்.

## இதோ

"சிக்கலான பிரச்சினைகளைப் பரிசீலிக்கும் போது யதார்த்தமான அணுகுமுறை தேவை. எல்.கே.ஜியிலிருந்து கட்டாயப்பாடமாகத் தமிழ் இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. பெற்றோரின் விருப்பம் ஆங்கிலமாக இருந்தால் ஆங்கிலப் பயிற்று மொழியும் அனுமதிக்கப்படலாம்" (தீர்ப்புரை பக்கம் - 49)

இவ்வாறு கருத்துக் கூறும் வா.செ. குழந்தை சாமி மோகன் குழுவில் இருந்ததால் தான் அக்குழுவின் பரிந்துரையில் தமிழ் அல்லது தாய் மொழி என்ற ஓட்டை மொழிக் கொள்கை உருவாக்கப்பட்டது. அதுபற்றி பிறகுபார்ப்போம்.

பயிற்று மொழியைத் தேர்ந்தெடுப்பதில் பெற்றோர் விருப்பம் தான் முக்கியம் என்ற வாதத்திற்கு வா.செ. குழந்தைசாமி வலுச்சேர்த்திருக்கிறார் அல்லவா?

உயர்நீதி மன்றம் செல்லாது என்று தீர்ப்பளித்துள்ள தமிழ் வழிக் கல்வி ஆணைகள் இரண்டு. ஒன்று மழலையர் பள்ளிகளில் மூன்றில் இரண்டு பாடங்களை (கணக்கு, அறிவியல், சமூகவியல்) தமிழ் வழியில் நடத்த வேண்டும் என்ற ஆணை இது **G.O.Ms. No.6** நாள் 13.1.1999 இன்னொன்று ஐந்தாம் வகுப்புவரை தமிழ் அல்லது தாய்மொழியில் கல்வி வழங்கிடும் அரசாணை **G.O.Ms. No.324** நாள் 19.11.1999.

முதல் ஆணையை எதிர்த்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சண்முகம், ஆணை செல்லும் என்று தீர்ப்பளித்தார். இதை எதிர்த்து மெட்ரிக் முதலாளிகள் முழு பெஞ்சுக்கு மேல் முறையீடு செய்து அவ்வழக்கு சென்னை உயர் நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது.

அம் முழு அமர்வு மன்றத்தில் வாதாடிய போது, தலைமை வழக்குரைஞர், ஆணையை செயல்படுத்தாமல் பார்த்துக் கொள்கிறோம் என்று உறுதி கூறினார். அதாவது உயர்நீதி மன்றம் தடை ஆணை வழங்காமல், தமிழக அரசு தனக்குத் தானே தடை போட்டுக் கொண்டது.

முதல் ஆணை இவ்வாறு செயலுக்கு வராமல் இருக்கும்போது, இரண்டாவது ஆணையை எந்த நோக்கத்தில் வெளியிட்டது தமிழக அரசு? தமிழ்

வழிக்கல்வி கோருவோரை திருப்திப்படுத்தக் கண்துடைப்பு ஆணையாக இது வெளியிடப்பட்டது என்பது தான் உண்மை!

உண்மையான அக்கறையுடன் செயல்பட்டிருந்தால், இரண்டாவது ஆணைக்குப் பதிலாக, தமிழ் வழிக் கல்விக்கு செப்பமான புதிய சட்டம் இயற்றியிருக்க வேண்டும். முதல் ஆணை சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறது. தமிழக அரசே அதற்குத் தடை விதித்துக் கொண்டு விட்டது என்ற உண்மைகளை மூடி மறைத்து, முதல் ஆணையை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொண்டு விட்டது, எனவே, இரண்டாவது ஆணைக்கு ஒன்றும் இடையூறு வராது, இதற்குப் புதிய சட்டம் தேவை இல்லை என்று தமிழக அரசு தனது 19.11.99 நாளிட்ட ஆணையில் கூறிக் கொள்கிறது. இது எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை?

இன்னொரு முக்கியமான பிரச்சினை அதுவரை சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக் கழகங்களின் கீழ் இருந்த மெட்ரிகுலேசன் கல்வியை தமிழக அரசு 1977-ல் ஓர் ஆணை மூலம் தன்கீழ் எடுத்துக் கொண்டது. **G.O. Ms No. 1720** (பள்ளிக் கல்வி துறை C2 ) நாள் 25.7.1977. இவ்வாணையில் படி தமிழக அரசு மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்குத் தனி வாரியம் அமைத்தது. அவ்வாணை இன்று வரை உயிருடன் உள்ளது.

தமிழ் வழிக் கல்விக்காக இரண்டாவது ஆணை போடும் போது 1977 ஆம் ஆண்டின் மெட்ரிக்குலேசன் ஆணையை ரத்து செய்திருக்க வேண்டும் அல்லது அதில் திருத்தங்கள் கொண்டு வந்து தமிழ் வழிக் கல்விக்கு உகந்த முறையில் அதை மாற்றி அமைத்திருக்க வேண்டும். ஏனெனில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடக்கத்திலிருந்து ஆங்கில வழிக் கல்வி கொண்டவை.

இவ்வாறு ஆக்கப் பூர்வமான ஏற்பாடுகளும் அக்கறையுள்ள தற்காப்பு நடவடிக்கைகளும் செய்யாமல் ஒப்புக்குச் சப்பாணியாக தமிழக அரசு இரண்டாவது ஆணையை வெளியிட்டது.

## *மொழிக் கொள்கை என்ன?*

தமிழ் வழிக் கல்வியில் தமிழக அரசு ஏன் இவ்வாறு நொண்டியடிக்கிறது? தி.மு.க.வின் மொழிக் கொள்கையில் உள்ள ஊனம் தான் காரணம். தி.மு.க.வின் மொழிக் கொள்கையில் ஏன் ஊனம் ஏற்பட்டது- அக்கட்சியின் இனக் கொள்கையில் ஏற்பட்ட பிணிதான் காரணம்.

நாட்டால் இந்தியன், இனத்தால் திராவிடன் மொழியால் தமிழன் என்று கூறிக்கொள்ளும் தி.மு.க., அனைத்தாலும் நாம் தமிழர்களே! இல்லாத கலப்பட தேசிய இனம் ஒன்றை கற்பனை செய்து கொண்டு தமிழ்த் தேசிய இனத்தின் முழுமையான அடையாளத்திற்கு இடையூறு விளைவிக்கிறது.

சென்னை மாகாணம் என்று இருந்த காலத்தில் அதில் தெலுங்கு, கன்னட, மலையாளப் பகுதிகள் சேர்ந்திருந்தன. அப்போது அவர்களுக்குள் இணைப்பு மொழியாக ஆங்கிலம் பயன்பட்டிருக்கலாம். அமைக்கப்பட்ட பிறகும் அதே திராவிடக் கனவில் தி.மு.க. மிதப்பதும் அது போன்று அதன் சகோதரக் கட்சிகள் மிதப்பதும் தமிழ்த் தேசியத்திற்குத் தீராத இடையூறாக இருக்கிறது.

இந்தித் திணிப்பை எதிர்த்த இக்கட்சிகள், ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கினவே தவிர தமிழை ஆட்சிமொழியாக, கல்வி மொழியாக அரங்கேற்ற உருப்படியான செயல்கள் எதுவும் செய்ய வில்லை. ஏதாவது செய்திருந்தால் அது ஏனோ தானோ என்று தான் இருக்கும்.

*ஒருபோதும் இந்தி வேண்டாம் எப்போதும் ஆங்கிலம் வேண்டும்* என்பதுதான் இக்கட்சிகளின் முழக்கம். இதில் தமிழ் எங்கே இருக்கிறது?

ஆங்கிலத்தை நீக்கிவிட்டால் தமிழன் காட்டு மிராண்டி ஆகிவிடுவான் என்று இன்றும் பேசிக் கொண்டு திரிகிறார் முரசொலி மாறன். கருணாநிதிக்கு வியூகம் வகுத்துத் தரும் சாணக்கியன் இவர் தான். தி.மு.க. பொதுக்குழுக்கூட்டத்திலேயே இந்த ஆணையை எதிர்த்து தமிழ் வாழ்க! தமிழ்க் குடிமகன் ஒழிக என்று பேசியவர் மாறன். பேரவைத் தலைவர் பழநிவேல் ராசனுக்கும் இதே கருத்துதான். தமிழ்க்குடிமகன் தமிழ்த் திணிப்பில் தீவிரமாக இருக்கிறார் என்பது இவர்கள் கருத்து "எனக்குத் தமிழ்க் குடிமகனும் வேண்டும் பழனிவேல் ராசனும் வேண்டும்" என்று பகிரங்கமாகக் கூறினார் கருணாநிதி.

மாறன், பழனிவேல்ராஜன் போன்றவர்கள் பகிரங்கமாகத் தமிழுக்கு எதிராகப் பேசுகிறார்கள். கல்வி அமைச்சர் அன்பழகனோ இதே கொள்கையை மனதில் வைத்துக் கொண்டு தமிழைக் கருவறுக்கிறார்.

19.11.99 இல் தமிழ் வழிக் கல்வி ஆணை போட்ட பிறகு, ஆங்கில வழி மெட்ரிகுலேசன் பள்ளிகள் நூற்றுக்கணக்கில் புதிதாகத் திறக்க இதே அன்பழகன் அனுமதி வழங்கியுள்ளார். இவர் தமிழ் வழிக்கல்விக்காக என்ன பற்றோடு பாடுபடுவார்? இவருக்குப் பற்று பணத்தின் மீதும் ஆங்கிலத்தின் மீதும் இருக்கிறது.

தமிழன் ஒரு தனித் தேசிய இனம். தமிழ்நாடு அவன் தாயகம். திராவிடன் என்ற மரபு இனம் இப்பொழு நடைமுறையில் இல்லை. ஒரு தேசிய இனத்திற்கு ஒரு மொழிக் கொள்கை தான் இருக்க முடியுமே தவிர, இரு மொழிக் கொள்கை இருக்க முடியாது என்ற சமூக அறிவியல் உண்மையை ஏற்றுக் கொண்டவர்களால் மட்டுமே உருப்படியாக தமிழ் வழிக் கல்விக்குப் பாடு படமுடியும்.

தங்களை இந்தியன் என்போர் கூறும் மும் மொழிக் கொள்கை இந்தியையும் ஆங்கிலத்தையும் திணிப்பது ஆகும்; திராவிடன் என்போர் கூறும் இரு மொழிக் கொள்கை ஆங்கிலத்தைத் திணிப்பது ஆகும்.

இந்தியைத் திணிக்கும் கட்சிகளுக்கு மாற்று தி.மு.க., அ.தி.மு.க போன்ற கட்சிகள் அல்ல! தமிழ்த் தேசிய அமைப்புகளே உண்மையான மாற்று ஆகும்!

## குழுவின் கோளாறுகள்

தமிழ் வழிக் கல்வியை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்குப் பரிந்துரைகள் வழங்கு வதற்காகப் போடப்பட்ட மோகன்குழு தமிழ் வழிக் கல்வி தேவையா இல்லையா என்ற அளவிற்கு விசாரணையில் இறங்கியது. ஒருவழியாக, ஒரு மனதாகப் பரிந்துரை வழங்கியது.

அதில் தமிழ் அல்லது தாய்மொழி என்ற பரிந்துரை அடிப்படையில் தவறானது.

தாய் மொழி என்பது என்ன?

தமிழ்நாட்டின் அலுவல் மொழியான தமிழை மேம்படுத்த வேண்டும், அதன் வழியில் கல்வி வழங்க வேண்டும். இதற்கான சட்டம் 1956 ஆம் ஆண்டே போடப்பட்டுள்ளது. இதைவிட்டு விட்டு, தமிழ் மொழி பேசாதவரின் தாய் மொழியை, மாநில அலுவல் மொழிக்குச் சமமாக மோகன்குழு வைத்தது பெருந்தவறு.

எந்த நாட்டில் இவ்வாறு அந்நாட்டின் அலுவல்மொழி அல்லது அவரவர் தாய்மொழி படிக்கலாம் என்று சட்டம் உள்ளது?

மூன்று நீதிபதிகளும் ஏற்கெனவே தமிழுக்கு எதிரான சிந்தனையுடன் உள்ளவர்கள். இவர்கள் கையில் இந்தத் தாய்மொழி என்ற அம்சம் ஒரு கோலாகக் கிடைத்து விட்டது. இந்தக் கோலை வைத்துக் கொண்டுதான் மூவர் குழு வீசு வீசென்று வீசியுள்ளது.

குழந்தைக்குத் தாய் மொழி எது என்பதைப் பெற்றோர் தான் சொல்ல வேண்டும். தாய் மொழி என்று பார்க்கவேண்டியதில்லை. குழந்தை பேசும் முக்கிய மொழி எது என்று பார்க்க வேண்டும் என்ற அளவிற்கு வாதம் நீண்டது. இவ்வாறு எது என்றே வரையறுக்கப்பட்ட முடியாத கன்னா பின்னா இலக்கணம் கொண்ட தாய்மொழியும் தமிழும் சமம் என்றும் இரண்டில் ஏதாவதொன்றைப்படித்தால் போதும் என்றும் நீதி மன்றம் வாதிட மோகன் குழு வழிவகுத்துத் தந்தது.

மெட்ரிக் குலேசன் முதலாளிகள் சாபாக வாதாடிய வழக்குரைஞர் நளினி

சிதம்பரம் (ப.சிதம்பரம் மனைவி) தனது குழந்தைக்குத் தாய் மொழி ஆங்கிலம்தான் எனறு உயர்நீதி மன்றத்தில் கூறினார்.

ஒரு தேசிய இனத்தின் மொழிக்கு அந்தத் தேசிய இனத்தின் தாயகத்தில் இருக்க வேண்டிய மேலாதிக்க நிலையை இன்னொரு மொழிக்குச் சமமாக தாழ்த்தியது மோகன் குழுவின் முரண்பாடாகும்.

சிறுபான்மையினர் மொழிக்கு தமிழ் மொழிக்கு ஈடாக சமத்துவம் வழங்கியிருக்கிறதே மோகன் குழு என்று கருதி உயர்நீதிமன்றம் அரசு ஆணையை ஏற்றதா? இல்லையே! ஓடுகிறவரைக் கண்டால் துரத்துகிறவருக்கு தொக்கு அல்லவா!

## *செய்ய வேண்டியது என்ன?*

நம் முன்னால் மூன்று உடனடிக் கடமைகள் இருக்கின்றன.

1. தமிழுக்கு எதிரான உயர் நீதி மன்றத் தீர்ப்பை செல்லாததாக்கி, தமிர் வழிக் கல்வியை முதல் கட்டமாக ஐந்தாம் வகுப்பு வரை விரைவில் கொண்டுவருவது.
2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் வாரியத்தை கலைத்துவிட்டு அப்பள்ளிகளையும், மற்ற அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளைப் போல் மாற்றிவிடுவது. அவை சுயநிதிப் பள்ளிகளாக செயல்பட்டாலும் தமிழக அரசுப் பள்ளிகள் பாடத் திட்டத்துடன் செயல் படுவது.
3. மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்ற, மக்கள் ஆதரவைத் திரட்ட பிரச்சாரம் மற்றும் போராட்டங்கள் நடத்துவது

முதல் நோக்கத்தை நிறைவேற்ற தமிழக அரசு புதிய சட்டம் ஒன்றை உடன் கொண்டு வந்து வரும் கல்வி ஆண்டிலேயே தமிழ் வழிக் கல்வியை ஐந்தாம் வகுப்பு வரை செயல்படுத்தவேண்டும். மூன்று ஆண்டு நான்காண்டு என்று இதற்கு அவகாசம் கொடுக்கத் தேவையில்லை. 12 ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்தவர்கள் மறு ஆண்டே மேற் கல்வியை ஆங்கில வழியில் படிக்கிறார்கள் அல்லவா! அதுபோல் 4-ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியில் படித்தவர்கள் 5ஆம் வகுப்பில் எளிதாகத் தமிழில் படிக்கலாம்.

உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து உடன் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய வேண்டும்.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் 1950 ஆம் ஆண்டு வாக்கில் உருவானவை. இவை பல்கலைக் கழகத்தின் கீழ் இருந்தன. பல்கலைக் கழகங்கள் தாம் இவற்றுக்குத் தேர்வு நடத்தின.

1977 ஆம் ஆண்டுவரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழ் 29 மெட்ரிக் பள்ளிகளும் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் கீழ் ஒரு பள்ளியும் ஆக 30 பள்ளிகள் மட்டுமே இருந்தன. இவை அனைத்திலும் பணம் கட்டிப் படிக்க வேண்டும், ஆங்கிலமே பயிற்று மொழி.

1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் கூட்டத்தில், மெட்ரிக் பள்ளிகளைத் தமிழக அரசின் கீழ் கொண்டு போய்விட வேண்டும் என்று முன் மொழியப்பட்டது.

அவசர நிலைப் பிரகடன காலத்தில் தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி இருந்தபோது 19.7.1976 அன்று அரசு 'சென்னைப் பல்கலை' மெட்ரிக்பள்ளி பிரதிநிதிகள் கலந்து பேசி தமிழக அரசு தனியாக மெட்ரிக்குலேசன் வாரியம் உருவாக்கி- அதன் இயக்குநர் கீழ் அது செயல்படுவது என்று தீர்மானிக்கப்பட்டது. பயிற்று மொழி பண வசூல் எல்லாம் பழைய மாதிரியே தொடர்வது என்று முடிவு செய்யப்பட்டது.

25.7.1977 நாளிட்ட **G.O.Ms. No.1720** (கல்வித்துறை) ஆணை மெட்ரிகுலேசன் வாரிய உறுப்பினர்கள் குறித்து வரையறை செய்தது. மெட்ரிகுலேசன் விதி முறைகளையும் அவ்வாணை வகுத்தது.

1987 இல் மெட்ரிக் பள்ளிகள் 200 ஆயின. 1992 -ல் இவை 1000 ஆயின. இப்பொழுது 2000 க்கு மேல் உள்ளன.

அ.தி.மு.க. கல்வி அமைச்சர்கள் அரங்க நாயகம், பொன்னுசாமி, தி.மு.க. கல்வி அமைச்சர் அன்பழகன் ஆகியோர் வாரி வாரிக் குவித்தனர். அனுமதிகளை வாரி வாரிக் கொடுத்தனர்.

இந்த மெட்ரிக்குலேசன் வாரியத்தைக் கலைக்க வேண்டும். இந்தப் பள்ளிகளால் பெற்றோர்க்கு பெருநட்டம். பெற்றோரிடம் கொள்ளையடிக்கும் மெட்ரிகுலேசன் கள்ள வாணிகர்கள் ஆசிரியர்களுக்கு உரிய சம்பளம் தருவதில்லை. ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஜனநாயக உரிமைகளும் வழங்குவதில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழர்களின் முகவரியாய் உள்ள தமிழ் மொழிக்கும் எதிராக இப்பள்ளிகள் இருக்கின்றன. எனவே மெட்ரிக்குலேசன் வாரியத்தை மூடிவிட்டு அப்பள்ளிகளைத் தமிழக அரசின் பள்ளிக் கல்வி இயக்குநரின கீழ் கொண்டு வரவேண்டும்.

## *ஏழைகளுக்கு எதிரானது*

பொதுவாகவே, தமிழைப் புறக்கணித்து விட்டு ஆங்கில வழிக்கல்வியை

செயல்படுத்துவது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் ஏழை மாணவர்களுக்கு எதிரானது. இம்மாணவர்கள் ஆங்கிலத்தில் தோல்வியுற்று மேல கல்வி தொடர முடியாமல் முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றனர். தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மருததுவம், பொறியியல் போன்ற தொழிலியல் படிப்புகளில் உரிய இடம் கிடைப்பதில்லை.

தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் நடக்கும் போராட்டம் புதிய வர்ணாசிரம தர்மப் போராட்டம். ஒரு வகை வர்க்கப் போராட்டம்.

இவ்வழக்கில் வாதிடும் போது மெட்ரிக் பள்ளி சார்பில் வாதாடிய வழக்குரைஞர் யு.என்ஆர். ராவ், இதுவரை ஆங்கில வழியில் படித்தவர்களை தமிழ் வழியில் படிக்கச் சொன்னால் பொன்னி அரிசியை ரேசன் அரிசியுடன் கலப்பது போல் இருக்கும் என்றார். இது வர்ணாசிரமப் போராட்டம் - வர்க்கப் போராட்டம் என்பதற்கு இதை விட சான்று வேண்டுமா?

## *நீதித்துறையின் தனித்துவம்*

நீதித்துறையின் தனித்துவத்தை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அரசு போடும் ஆணை அல்லது சட்டம் செல்லும் செல்லாது என்று தீர்ப்பு வழங்கும் அதிகாரம் நீதி மன்றத்திடம் இருப்பதை நாம் ஆதரிக்கிறோம்.

ஆனால் தமிழ்த் தேசிய இனத்திற்கும் அதன் தாய் மொழிக்கும் எதிராகப் பச்சையான பக்கச்சார்போடு மூன்று நீதிபதிகள் அளித்துள்ள தீர்ப்பு ஓர் இனத்திற்கே பெருந்தீங்கு விளைவிப்பதாக உள்ளது. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது.

## *போராட்டம் தேவை*

இந்த நோக்கங்களை நிறைவேற்றப் போராட வேண்டும். சிறை செல்ல வேண்டும் . ஈக் கலையாமல் தேனெடுக்க முடியாது.

தமிழுக்கெதிரான உயர்நீதிமன்றத்தீர்ப்பைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும்.

இரட்டை வேடம் போடும் அரசியல் கட்சிகளை அம்பலப்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசிய உணர்வுபீறிட்டுக் கிளம்பிடும்வகையில் பிரச்சாரமும் போராட்டமும் நடத்த வேண்டும்!

கெடல் எங்கே தமிழின் நலம் - அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!

-புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

படியுங்கள்

தமிழர் கண்ணோட்டம்

தமிழ்த் தேசிய மாத இதழ்